DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.
Case No.CC 59/2021
Prosecution witness – PW 8

| | | |
|---|---|---|
| Name | :திரு.கோவிந்தன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2, A4, A5 present. A3 absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed)
28.11.2023

முதல் விசாரணை

1. நான் தற்போது திருவாடனை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 14.01.2021 ம் தேதி 11.35 மணிக்கு கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது கடலாடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த பூலாங்குளம் கிராமத்தை சேர்ந்த புஸ்பராஜ் மகன் சாந்தகுமார் என்பவர் மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருப்பதாக தெரிந்து கொண்டு அங்கு சென்று அவரை விசாரித்து அவர் கொடுத்த புகாரினை பெற்று நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.5/2021 u/s.147, 148, 294(b), 323, 324, 506(ii) இ.த.சவாக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.

3. பின்னர் அன்றைய தினம் 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான முனியம்மாள், செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும். இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான சாந்தகுமார், கனகராஜ், சத்தியா, மீனாட்சி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் 1 வதுஎதிரியை 15.01.2021 ந்தேதி 08.00 மணிக்கு பூலாங்குளம் கண்மாய் கரையில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்ற எதிரிகளான அ.சா–2, 3 முதல் 5 வரை ஆகியோர்கள் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாண்புமிகு ராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்றுவிட்டபடியால் கைது செய்யவில்லை.

6. பின்னர் 18.02.2021 ந்தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா–1க்கு சிகிச்சை அளித்த கடலாடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.டேவிட் மலையரசன் மற்றும் மேல்சிகிச்சை அளித்த ராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் திரு.கார்த்திக் பாலாஜி ஆகியோர்களை விசாரித்து காயச்சான்று பெற்றேன்.

7. பின்னர் அன்றைய தினமே வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவு u/s.147, 148, 294(b), 323, 324, 506(ii)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கின் எதிரிகளுக்கும் இந்த வழக்கின் புகார்தாரருக்கும் இந்த வழக்கின் முன் முன்விரோதமும் முன் வழக்குகளும் இருந்துள்ளது என்றால் சரிதான். சம்பவத்தினத்தன்று 11.35 மணிக்கு தகவல் கிடைத்து கடலாடி மருத்துவமனைக்கு 12.30 மணிக்கு சென்றேன்.

2. அங்கே எதிரிகளிடம் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை.

ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பெற்றுள்ள புகார் வாக்கு மூலத்தில் சம்பவம் காலை 09.00 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளார்கள்.

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்தில் 11.35 மணிக்கு தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளேன். (சாட்சி மீண்டும் மாற்றி முதல் தகவல் அறிக்கையில் 18.00 மணிக்கு தகவல் கிடைத்ததாக சாட்சியம் அளிக்கிறார்.)

4. சம்பவம் நடந்து 9 மணிநேரம் நேரம் கழித்து தான் தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் இடத்திற்கும் எங்கள் காவல் நிலையத்திற்கும் 6 கி.மீ இருக்கும். ஆனால் புகார்தாரர் நேரடியாகவோ தொலைபேசி மூலமாக எங்களுக்கு தகவல் கொடுக்காமல் 20 கி.மீ மேல் உள்ள கடலாடி மருத்துவமனைக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. புகார் மனுவில் சம்பவம் நடந்தது என்வீட்டில் என்று சொல்லியுள்ளார். ஆனால் எந்த தெரு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரில் எதிரி எடுத்து வந்து கம்பி மற்றும் கட்டையின் நீளம் எந்த வகை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை.

6. 1ம் எதிரியிடமிருந்து நான் எந்த ஆயுதமும் கைப்பற்றவில்லை. சம்பவத்தை நேரடியாக யாரும் பார்த்ததாக புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாந்தகுமார் பின்தலையில் எந்த பகுதியில் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை.

7. புகார் மனுவில் எத்தனை மணிக்கு அற்புதராதஜுக்கு தகவல் சொல்லி கடலாடி அரசு மருத்துவமனை மற்றும் ராமநாதபுரம் மருத்துவமனைக்கும் எத்தனை மணிக்கு சென்றதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

8. நான் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்ற பின்னர்

புகார்தாரர் கைப்பட புகாரை எழுதிக்கொடுத்தார். புகார்தாரர் வாக்குமூலத்தில் போலீசார் எழுதிக்கொண்டதாக சொல்லியிருந்தால் அது தவறாகும்.

9. நான் மருத்துவரை விசாரித்து வாங்கிய விபத்து பதிவேட்டில் காயம்பட்ட நபரை தாக்கியதாக 6 ஆண்களும், 1 பெண் ஆகியோர் தாக்கியதாக உள்ளது என்றால் சரிதான். அதில் டாக்டர் வழங்கிய விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரிந்த நபர் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

10. என்னுடைய முதல் தகவல் அறிக்கையில் கம்பு என்று சொல்லியிருந்தேன். ஆனால் மருத்துவர் வழங்கிய சான்றிதழில் கம்பு என்று குறிப்பிடவில்லை என்றால் கம்பி, கட்டை என்று குறிப்பிட்டுள்ளார். நான் தயாரித்த பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள வீட்டுக்காரர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

11. இந்த வழக்கின் சம்பவத்தை விலக்கிவிட்டதாக உள்ள கனகராஜ், மீனாட்சி, சத்தியா மூவரும் புகார்தாரருக்கு உறவினார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

12. இந்த வழக்கிற்கு எதிர் வழக்கிற்காக 1வது எதிரியின் தாயார் எஸ்தர் என்பவர் புகார்தாரர் மீது வழக்கு கொடுத்துள்ளரா என்றால் இல்லை. எஸ்தர் கொடுத்த புகாரை நான் வாங்க மறுத்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் எஸ்தர் இந்த நீதிமன்றத்தில் தனிநபர் புகார் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியும்.

13. இந்த வழக்கிற்கு முன்பாக 1ம் எதிரிக்கு முன்பாக 2,3 வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் தரப்பிற்கும் புகார்தாரர் தரப்பிற்கும் இடையே தேர்தல் முன்பகை உள்ளது. சம்பவ இடத்திற்கு

செல்லாமல் மாதிரி வரைபடம், பார்வை மகஜர், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட அதற்கு ஆதரவாக தாக்கல் செய்த இறுதி அறிக்கைக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளால் இந்த புகார்தாருக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.